# சென்னை சொசைட்டி தொடர்பாக, 20.01.2025 அன்று கூடுதல் கூட்டுறவு பதிவாளர் அவர்களிடம் சந்திப்பு

அன்புமிக்க தோழர்களே, வணக்கம்.

டெல்லி பன்மாநில கூட்டுறவு பதிவாளர் (REGISTERAR OF MULTI STATE COOPERATIVES) அலுவலகத்தில் இருந்து 17.12.2024 அன்று தேதியிட்ட கடிதம், தமிழ்நாடு அரசாங்கத்தின், கூட்டுறவு சங்க பதிவாளர் (REGISTERAR OF CO-OPERATIVE SOCIETIES) அவர்களுக்கு அனுப்பப் பட்டிருந்தது. அதில் சென்னை GTECSஇல் உறுப்பினர்களுக்கு சேர வேண்டிய தொகைகள் வழங்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பல புகார்கள் வந்துள்ளன என்றும், இது தொடர்பாக 11.04.2023 அன்று சென்னை GTECS செயலாளருக்கு விளக்கம் கேட்டு அனுப்பிய கடிதத்திற்கு இன்னமும் பதில் வரவில்லை என்றும் கூறப்பட்டிருந்தது. மேலும், MSCS ACT 2002ன் விதி எண் 108ன் கீழ் செம்புதாஸ் தெருவில் உள்ள GTECSக்கு சென்று கணக்குகளை ஆய்வு செய்து பதில் அனுப்ப வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த கடிதத்தின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை விசாரிக்க BSNL ஊழியர் சங்கம் சார்பாக தோழர்கள் S.செல்லப்பா, A.பாபு ராதாகிருஷ்ணன், K.சீனிவாசன் மற்றும் NFTE மாநிலச் செயலாளர் தோழர் K.நடராஜன் ஆகியோர் 20.01.2025 அன்று நேரடியாக சென்று திருமிகு R.பிருந்தா ADDITIONAL REGISTERAR, INTEGRATED COOPERATIVE DEVELOPMENT PROJECT அவர்களை நேரில் சந்தித்தனர். அவரிடம் பேசியதில், டெல்லியில் இருந்து கடிதம் வந்துள்ளதாகவும் அதன் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவு இட்டு உள்ளதாகவும் தெரிவித்தார். சொசைட்டியில் நடைபெற்ற ஊழல்கள் சம்பந்தமாக நாம் அவரிடம் விரிவாக எடுத்துக் கூறினோம். ஆய்வு செய்வதற்கு அதிகாரிகளை நாங்கள் அனுப்புகிறோம் என்று உத்தரவாதமாக கூறியுள்ளார். மேலும் கடந்த சில மாதங்களுக்கு முன், BSNLEU, NFTE, SNEA மற்றும் AIBSNLEA தமிழ் மாநில சங்கங்கள் நேரடியாக சென்று இவரிடம் அனுப்பிய புகாரை, டெல்லிக்கு அனுப்பியதாகவும் ADDITIONAL REGISTERAR, INTEGRATED COOPERATIVE DEVELOPMENT PROJECT தெரிவித்தார். நாம் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஆய்வு நடத்தப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் நாம் புகாரில் கொடுத்துள்ள அம்சங்களில் ஓரிரு சப்போட்டிங் டாக்குமெண்ட்ஸ் வேண்டும் என்று கேட்டார்கள். .அதையும் நாம் தருவதாக கூறி உள்ளோம்.

தோழர்களே,

சொசைட்டி பிரச்சனையில் நமது 4 சங்கங்களின் தலையீடு தொடர்ந்து இருந்து வருகிறது. ஊழியர்களுக்கு விரைவில் பணம் கிடைக்க அனைத்து முயற்சிகளையும் நாம் தொடர்ந்து மேற்கொள்வோம். இன்று ஏற்பட்டிருக்கிற இந்த சூழல் ஒரு முன்னேற்றமே. நமது முயற்சி மென்மேலும் தொடரும்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

| | | | |
|---|---|---|---|
| **P.ராஜு** | **K.நடராஜன்** | **G.வளனரசு** | **S.பிரபாகரன்** |
| **CS BSNLEU** | **CS NFTE** | **CS SNEA** | **CS AIBSNLEA** |